# 2020 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரன கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. சி. பாண்டு,**
**நகராட்சி பொறியாளர் மற்றும்**
**தனி அதிகாரி(பொ),**
**விருத்தாசலம் நகராட்சி.**

**பொருள் எண். 1.**

செயல் அலுவலர் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில், விருத்தாசலம் அவர்களின் கடிதத்தில் மேற்படி திருக்கோயிலுக்கு சொந்தமான கீழ்கண்ட மனைபகுதிகள் விருத்தாசலம் நகராட்சிக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும், அம்மனை பகுதிக்கு கீழ்கண்ட விவரப்படி 31.03.2018 வரை வாடகை பாக்கி செலுத்தப்படாமல் நிலுவை உள்ளதை உடன் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட மனை வாடகை பாக்கியினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | மனை பகுதி | 31.03.2018 வரை செலுத்தவேண்டிய மனை வாடகை ரூ. |
|---|---|---|
| 1. | சாத்துக்கூடல் ரோடு | 395884/– |
| 2. | சாவடிக்குப்பம் | 99576/– |
| | **மொத்தம்** | **495460/–** |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3. பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3811 நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் காலியாக உள்ள துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடத்தினை நிரப்பும் பொருட்டு இந்நகராட்சியில் பணி மூப்பு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மூப்பு பட்டியலில் வரிசை எண். 1ல் காணும் திரு. சுரேஷ்குமார் த/பெ. மாயவன், துப்புரவு பணியாளர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக பதவி உயர்வு பெற விருப்பமில்லை என தெரிவிக்கப்பட்டதால் அன்னார் மூன்று ஆண்டுகள் பதவி உயர்வு துறக்கப்பட வேண்டியவர். மூப்பு பட்டியல் வரிசை எண். 2ல் காணும் திரு. கொளஞ்சி த/பெ. ராசு, துப்புரவு பணியாளருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. தற்போது ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர் பணியிடம் காலியாக உள்ளதால் மூப்பு பட்டியலில் வரிசை எண். 3ல் காணும் திரு. வீராசாமி த/பெ. குப்புசாமி என்பவருக்கு துப்புரவு பணி மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்க நியமன குழுவின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி தகுதி வாய்ந்த திரு. வீராசாமி த/பெ. குப்புசாமி துப்புரவு பணியாளருக்கு துப்புரவு பணி மேற்பார்வையாளராக பதவி உயர்வு வழங்கலாம்.

(ந.க.எண். 9661/2015/சி1)

**தீர்மானம் எண். 3812 நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சியை நான்காம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு உயர் நீதி மன்றத்தில் திரு. வாகித்கான் என்பவர் வழக்கு (வழக்கு எண். W.P.No. 34564/2019) தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆஜராகிவரும் உயர்நீதி மன்ற வழக்கறிஞரான திரு. எம். கிருபாகரன் என்பவர் வழக்கறிஞர் கட்டணம் ரூ. 15000/– ஐ செலுத்தக் கோரியுள்ளார். மேற்படி செலவின தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. கட்டணம் செலுத்தவேண்டியதன் அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 582/2020/எப்)

**தீர்மானம் எண். 3813 நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4.</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் மற்றும் வாடகை இனங்கள் ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்பட்ட நிலையில் COVID-19 எனும் கொரோனோ வைரஸ் தொற்று நோய் உலகம் முழுவதும் பரவி பல உயிர்சேதங்களை ஏற்படுத்தி வருவதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு 24.03.2020 முதல்வ 31.03.2020 வரை தமிழகம் முழுவதும் 144 தடை உத்தரவு ஆணை அமல்படுத்தியுள்ளார்கள். எனவே குத்தகை மற்றும் வாடகை இனங்கள் ஏலம் விட இயலாத நிலை உள்ளது. எனவே ஓராண்டு குத்தகை இனமான பேருந்து நிலைய நுழைவுக் கட்டண குத்தகை உரிமம் 01.04.2020 முதல் துறை ரீதியாக வசூல் செய்யவும் அதற்கான டிக்கெட் டோக்கன்கள் வழக்கம்போல் ஸ்ரீ முருகன் பவர் பிரஸ் நிறுவனத்தில் ஏற்கெனவே உள்ள விலைக்கே அச்சடித்துக்கொள்ளவும் மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று துறை வசூல் செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேலும் துறை வசூலுக்கான டோக்கன் ஸ்ரீ முருகன் பவர் பிரஸ், நிறுவனத்தில் அச்சிட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 3814 நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5.**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் மொத்தம் 250 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 2 முகவுரை வீதம் 15 நாட்களுக்கு கொரோனோ வைரஸ் COVID-19 தடுப்பு நடவடிக்கைக்கு 250x2=500x15 நாட்களுக்கு 7500 முக உறை வாங்குவதற்காகவும் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது சுகாதாரம் நலன் கருதியும், கொரோனோ வைரஸ் தடுப்பு நடவடிக்கை அவசியம் அவசியத்தை கருதியும் சமுதாய வள பயிற்றுனர் திருமதி. எஸ். பிரேமா ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் மேற்கண்ட முககவசம் வாங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு முககவசம் வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3721/2018/எச்1)

**தீர்மானம் எண். 3815, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் கொரோனோ வைரஸ் COVID-19 பரவா வண்ணம் கிருமி நாசினிகள் போதிய அளவு கைவசம் வைத்துக்கொள்ளவேண்டும் என மாவட்ட ஆட்சியர், கடலூர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர்களின் அறிவுரையின் பேரில் கிருமி நாசினி பொருட்கள் வாங்குவதற்கு நகராட்சிகள் சட்டம் 1920 ன் பிரிவு 15ன் கீழ் தற்சமயம் இருப்பு உள்ள நிறுவனமான ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன் எண். 60/101, A,B, R.S. பில்டிங் குளக்கரை தெரு, காமராஜ் நகர், நாமக்கல் அவர்களிடம் கீழ்கண்டுள்ள கிருமி நாசிநிகள், முக கவசம் கையுரைகள் வாங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | லைசால் | 5500 லிட்டர் |
| 2. | ஹேண்ட் சானிடைசர் | 1000 லிட்டர் |
| 3. | பினாயில் | 500 லிட்டர் |
| 4. | ஹைப்போகுளோரைடு 1% | 1000 லிட்டர் |
| 5. | கை உறை | 200 எண்ணம் |
| 6. | பிளீசிங் பவுடர் | 3 டன் |

**அலுவலக குறிப்பு:**

பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினிகள் வாங்கிட மன்றத்தின் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண். 3721/2018/எச்1)

**தீர்மானம் எண். 3816, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7.</u>

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் 29.03.2020ம் நாளிட்ட மின்னஞ்சல் செய்தியில் தெரிவித்துள்ளவாறு கொரோனோ வைரஸ் நடவடிக்கை மேற்கொள்ளும் களப்பணியாளர்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும் பாதுகாப்பு கவசம் அணிந்து தகுந்த பாதுகாப்பு கவசத்துடன் களப்பணியில் ஈடுபடவேண்டியுள்ளதால் 261 செட் பாதுகாப்பு கவசம், 5000 முககவசம், 600 கையுரை வாங்குவதற்கு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது சுகாதாரபணி கொரோனோ வைரஸ் தடுப்பு நடவடிக்கை அவசர அவசியத்தினை கருதி Green Agro Enviroinment Service No, 6, Car Street, (pp) Post Office, Madhuranthagam அவர்களிடம் மேற்கண்ட பாதுகாப்பு கவசம் வாங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

கொரோனோ வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்தும், பணியாளர்களின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டும் பாதுகாப்பு கவசம் வாங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3721/2018/எச்1)

**தீர்மானம் எண். 3817, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8.</u>

விருத்தாசலம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2019 – 2020ன் கீழ் ரூ. 5,00,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 16 தெற்கு பெரியார் நகர் திருவள்ளுவர் நகர் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் , கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ2/3970/2019 , நாள்.18.02.2019ல் அனுமதியளித்தற்கிணங்க 03.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி,<br>ஒப்பந்ததாரர் | (-) 0.02 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.15 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.02 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2860 /19/இ1)

**தீர்மானம் எண். 3818, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9.**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கொரோவைரஸ் போன்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்வதற்கு கீழ் காணும் கிருமி நாசினிகள் வாங்குவதற்கு பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் நகரில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், நிறுவனத்திடம் கீழ்காணும் கிரு. நாசினிகள் வாங்குவதற்கு தனி அலுவலர் 13.03.2020 ல் முன் அனுமதி அளித்ததன் பேரில் பணி உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான தோராய செலவினம் ரூ. 25.00 இலட்சம் (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கிருமி நாசினிகள் | அளவு |
|---|---|---|
| 1. | லைசால் | 100 லிட்டர் |
| 2. | ஹேண்ட் சானிடைசர் | 200 லிட்டர் |
| 3. | முகஉறை | 200 எண்ணம் |
| 4. | முழு உறை (ஏப்ரான்) | 20 எண்ணம் |
| 5. | விழிப்புணர்வு நோட்டீஸ் | 5000 எண்ணம் |
| 6. | பிளாஸ்டிக்வாளி | 10 எண்ணம் |
| 7. | மாப்பு | 10 எண்ணம் |
| 8. | சென்சார் தெர்மா மீட்டர் | 2 எண்ணம் |
| 9. | E. M. திரவம் | 200 லிட்டர் |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி அளித்ததன் பேரில் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வீஸ், நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
   (கோப்பு எண். 3721/2018/எச்1)

**தீர்மானம் எண். 3819, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10.**

விருத்தாசலம் நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு அன்றாடம் குப்பைகளை சேகரிக்கும் பணி, குப்பைகளை அகற்றும் பணி, தரம் பிரிக்கும் பணி, போன்றவைகளுக்கு கையுறை தேவைப்படுவதாலும், அவ்வாறு பயன்படுத்தப்படும் கையுறைகள் சராசரியாக மூன்று மாதங்கள் மட்டுமே பயன்படுத்த இயலும் என்பதால் தற்சமயம் பணிபுரியும் 173 துப்புரவு பணியாளர்களுக்கு வருடத்திற்கு தேவையான 600 கையுறைகள் சிட்கோ செலவீனம் 1,20,000/– மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (மன்றத்தீர்மான எண். 3618, நாள். 31.10.2019) மேற்கண்ட நிறுவனத்திடம் பொருள் விவரப்பட்டியல் பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டு 600 கையுறைகள் பெறப்பட்டு அதற்கான பட்டியலும் வரப்பட்டுள்ளது. மேற்படி வரப்பட்டுள்ள பட்டியலுக்கான தொகை ரூ. 2,46,330/– ஆகும். மேற்படி சிட்கோ நிறுவனத்திற்கு வழங்கவேண்டிய ரூ. 1,26,330/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பொருள் குறித்த செலவினத் தொகையினை 2019–2020 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2779/2018/எச்1)

**தீர்மானம் எண். 3820, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11.</u>**

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் கொசு மருந்து அடிக்கும் ஸ்பிரேயர் மெஷின் 5 புதியதாக வாங்குவதற்கு ஆணையர் அவர்களின் மன்றதீர்மான எண். 3580, நாள். 31.10.2019 ல் அனுமதி அளித்துள்ளதற்கிணங்க, 04.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Jayam Electricals,<br>Authorised Dealer,<br>No. 4/33, jagirhuzen Street,<br>Kasthuribhai Nagar,<br>Tambaram West,<br>Chennai 600 045. | 5376/– |
| 2. | Mathaji Electrical,<br>Electrical Engineers Distributors,<br>No, 222/A, Eswaran Nagar,<br>Avadi Road, Redhills,<br>Chennai. | 5712/– |
| 3. | Prime Agencies,<br>Authorised Dealer,<br>No. 34/86, South Fort Street,<br>Virudhachalam. | 4928/– |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3ல் காணும் Prime Agencies, Authorised Dealer, No. 34/86, South Fort Street, Virudhachalam என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.

(கோப்பு எண். 8906/2017/எச்1)

**தீர்மானம் எண். 3821, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 12.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதி 2019 – 2020ன் கீழ் ரூ. 3,50,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகர் பகுதியில் விடுப்பட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3806 , நாள்.28.02.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் | (-) 0.05 % குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.10 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி.கே.சாந்தி, ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**தீர்மானம் எண். 3822, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 13.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதி 2019 – 2020ன் கீழ் ரூ. 4,90,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 32 ஆற்றங்கரை படித்துறை சீரமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3807, நாள்.28.02.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.டி.அய்யப்பன், ஒப்பந்ததாரர் | (-) 0.06 % குறைவு |
| 2. | திரு.T.மணிகண்டன், ஒப்பந்ததாரர் | (+) 1.18 % அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.டி.அய்யப்பன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.06 % குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 315 /2020/இ1)

**தீர்மானம் எண். 3823, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 14.</u>**

விருத்தாசலம் நகராட்சி பொது பிரிவு, வருவாய் பிரிவு, பொது சுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் உள்ள பிரிண்டர்களின் டோனர் ரீபிள் மற்றும் சர்வீஸ் செய்ய 2020–2021 ஆம் ஆண்டிற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ. 60000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3824, நாள். 31.03.2020.**
**அனுமதிக்கப்பட்டது**